SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

# AA2 பரீட்சை - ஜுலை 2018

**(July 2018 Examination - AA2 Level)**

வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் **: AA25**

# வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும் (BLE)


இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாஹிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

## இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

## AA2 பரீட்சை – ஜூலை 2018

## (AA25) வியாபார சட்டமும் ஒழுக்கநெறியும்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**குறு நோக்குவினாக்கானவிடைகள் (OTQs)**

**பத்து (10) கட்டாய வினாக்கள்.**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

### வினா 01ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

| வினா | விடை |
|---|---|
| 1.1 | (2) |
| 1.2 | (3) |
| 1.3 | (4) |
| 1.4 | (4) |
| 1.5 | (2) |
| 1.6 | (1) |
| 1.7 | (2) |

1.8 பின்வருவனவற்றுள் ஏதேனும் இரண்டு

i. காணி உரிமை தொடர்பான வழக்குகள்

ii. வாடகைக் குடியிருப்பாளர்களை வீட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு உரிமையாளர்கள் தொடர்ந்த வழக்குகள்

iii. கடன்களை மீளப்பெறுவதற்கான வழக்குகள்

iv. கவனயீனத்தால் ஏற்படுகின்ற சேதங்களுக்கான ந்ட ஈட்டுக் கோரிக்கைகள்

v. விவாக ரத்து வழக்குகள்

1.9 பின்வருவனவற்றுள் ஏதேனும் இரண்டு

i. காசோலை எழுத்திலான ஒரு சாதனமாகும்.

ii. காசோலைகளில் நிபந்தனையற்ற கட்டளை ஒன்று காணப்படும்.

iii. காசோலைகளானது வாடிக்கையாளர்களால் அவரது வங்கி மீது வரையப்படுவதாகும்.

iv. காசோலையானது வாடிக்கையாளரால் கையெழுத்திடப்பட்டு இருத்தல் வேண்டும்.

v. காசோலைகளானவை கோரும்போது மட்டுமே செலுத்தப்படுதலாக இருத்தல் வேண்டும்.

vi. காசோலையில் செலுத்தப்பட வேண்டிய தொகை குறிப்பிடப்பட வேண்டும்.

vii. யாருக்குப் பணம் செலுத்தப்பட வேண்டும் என்பது நிச்சயமானதாக காணப்படுதல் வேண்டும்.

viii. காசோலைகளானவை வங்கி வாடிக்கையாளர்களினால் அல்லது கணக்குரிமையாளரினால் சரியாக திகதியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

ix. காசோலைகளானவை குறுக்கு கோடிடல் தொடர்பான விதி முறைகளுக்கு உட்பட்டவை

x. வரையுனர், வரையுனி மற்றும் பெறுனர் ஆகிய மூவருமே காசோலையினது திறத்தவர்களாவர்.

1.10 வருடாந்த விடுமுறையில் 7 நாட்கள்.

***(மொத்தம் 20 புள்ளிகள்)***

aat SRI LANKA

**பிரிவு *A* இன் நிறைவு**

## பகுதி - B

**05 கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## வினா 02ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

இது உறுதிப்படுத்தல் / வலுப்படுத்தல் மூலமான முகவராண்மையை அடிப்படையாகக் கொண்டது. எனினும் முதல்வரின் உறுதிப்படுத்தல் மாத்திரமே, உறுதிப்படுத்தல் அடிப்படையிலான முகவராண்மையை தோற்றுவிக்கப் போதுமானதாகாது. இது சில விதிகளை உள்ளடுக்குகிறது. முகவராக நியமிக்கப்படுகின்ற நபர் வெளிப்படையாக தன்னுடைய முதல்வருக்காக ஒரு ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதே வேளை முகவர் தனது முதல்வரை பிரதிநிதித்துவப்படுத்தாது ஒரு ஒப்பந்தத்தில் ஈடுபட்டு பின்னர் அது முதல்வரினால் உறுதிப்படுத்தப்பட்டாலும் அங்கு வலுப்படுத்தல் / உறுதிப்படுத்தல் ஊடான முகவராண்மை உருவாகாது.

குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் சுனில் குறிப்பிட்டளவு சீனியை வாங்குவதற்கு பியால் என்பவருக்கு அதிகாரம் அளித்திருந்தார். ஆனால் பியால் சூழ்நிலைகளின் காரணமாக தனது அதிகாரத்தை மீறி குறிப்பிட்ட அளவு சீனியை அதிக விலைக்கு வாங்கியுள்ளார். அதே வேளை பியால், சுனில் தனது முதல்வர் என்பதை வெளிப்படுத்தாது தனது சொந்தப் பெயரிலேயே வாங்கியுள்ளார்.

பியால் இவ்வொப்பந்தத்தில் சுனிலின் முகவராக ஈடுபடாத காரணத்தினால், சுனில் மற்றும் நிமாலிடையே ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்படவில்லை. அதே வேளை சுனில் மற்றும் பியால் ஆகியோரிடையே உறுதிப்படுத்தல் மூலமான முகவராண்மை தோற்றுவிக்கப்படவில்லை. ஆகவே நிமால் பணத்தை சுனிலிடமிருந்து வசூலிப்பதற்கான உரிமையைக் கொண்டிருக்கவில்லை.

**(05 புள்ளிகள்)**

## வினா 03ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**மூன்றாவது வினாவிற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் பின்வருவனவற்றுள் ஏதேனும் இரண்டு அடிப்படைக் கோட்பாடுகள்**

1 **தனித்துவம்**

இதுவே ஒரு தொழில்சார் நபரின் நியாயத்துவம் தொடர்பான அடிப்படையாகும். இவர் எப்போதும் நேர்மையானதும், முன்முனைவுடனும் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். மேலும் இவர் நியாயமாகவும், உண்மையாகவும் நடந்து கொள்வதோடு, உண்மைகளை மற்றையவர்களிடம் இருந்து மறைக்கக் கூடாது. தனித்துவம் என்பது தமது சக ஊழியர்களை சமமாக மதிப்பதோடு அவர்களை வெவ்வேறு வகையில் நடத்துதல் கூடாது என்பதையும் வலியுறுத்துகின்றது.

2 **நோக்கத்தை கொண்டிருத்தல்**

ஒரு தொழில்சார் தீர்மானம் எப்போதும் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு உணர்வுகளால் தாக்கம் செலுத்தப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். தொழில் சார் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது பக்கம் சார்ந்தோ அல்லது முரணான நன்மைகளை பெற்றுக்கொள்வதோ பிழையானதாகும். முரணான நன்மை என்பது, தமது தனிப்பட்ட நோக்கம் தொழில்சார் நோக்கத்துடன் முரண்படும்

போது உருவாகிறது. ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளும்போது அவர் காணப்படும் அனைத்து வளங்கள் மற்றும் தகவல்களை பயன்படுத்துதல் வேண்டும். அதன்போது தனிப்பட்ட ரீதியில் பக்கம் சாராதிருக்க வேண்டும்.

3 **தொழில்நுட்ப இயலுமை**

தொழில்நுட்ப இயலுமை என்பது எப்போதும் நிலையான வகையில் ஏற்றுக் கொள்ளும் அளவில் தொழில்சார் சேவையினை வழங்கும் இயலுமையை குறிக்கின்றது. சேவையை வழங்கும்போது தொழில்சார் நபர் தனது அறிவு, திறன் என்பனவற்றை நடைமுறை அபிவிருத்திகள், சட்டங்கள், தொழில்நுட்பங்கள் என்பவற்றோடு பேணுதல் வேண்டும். அப்போதே தனது வாடிக்கையாளருக்கு சிறந்த தொழில்சார் சேவையை வழங்க முடியும். இவர் பிரயோகிக்கத்தக்க நுட்பங்கள் மற்றும் தொழில் சார் நியமங்கள் தொடர்பில் எப்போதும் கவனத்துடன் செயற்பட வேண்டும்.

4 **போதுமான கவனக்கட்டுப்பாடு**

ஒரு நியாயமான நபர் ஒரு விடயத்தில் எத்தகைய கவனத்தை செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றதோ, அந்த அளவிற்கான கவனத்தை தொழில்சார் விடயங்களில் செலுத்துதல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளல் எதிர்பார்க்கப்படுகின்றது.

போதுமான கவனக்கட்டுப்பாடு என்பது போதுமான கவனம் என்ற கோட்பாட்டிலிருந்து உருவானதாகும். அதாவது ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பம் தொடர்பில் நிலையானதும் கவனமானதுமான அறிவுப் பிரயோகம் காணப்படல் வேண்டும் என்பதாகும்.

5 **இரகசியத்தன்மை**

இங்கு தொழில்சார் நபர்கள் தகவல்களை மூன்றாம் நபர்களுக்கு வணிக மற்றும் தொழில்சார் உறவினை தாண்டி உரிய அங்கீகாரமின்றி வெளிப்படுத்தக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றது. ஆயினும் சட்ட ரீதியான அல்லது தொழில் சார் கடமையின் பொருட்டு இரகசியமான தகவல்களை வெளிப்படுத்தலாம். மேலும் இவர் தனிப்பட்ட நலன்களுக்காக வணிக. / தொழில்சார் உறவை பாதிக்கும் வண்ணம் இரகசியத் தகவல்களை வெளிப்படுத்தக் கூடாது.

6 **சுயாதீனத்தன்மை**

இது இரு பக்கங்களை கொண்டதாகும் ஒன்று மனதின் சுயாதீனத்தன்மை, மற்றையது வெளிப்பாட்டின் சுயாதீனத்தன்மை ஆகும். மனதின் சுயாதீனத்தன்மை என்பது மனநிலையாகும். இது ஒரு விடயம் தொடர்பில் எதுவித ஆதிக்கமுமின்றி தனது தீர்மானத்தை வெளிப்படுத்துதல் ஆகும். சுயாதீனத்தன்மையுடன் இயங்க முடியுமாயின் ஒரு தனிப்பட்ட நபர் தனித்துவத்துடனும், ஒரு நோக்கத்துடனும், உயர்தொழில்சார் தன்மையுடனும் செயற்பட முடியும்.

வெளிப்படுத்தலில் சுயாதீனத்தன்மை என்பது, தன்னை அவதானிப்போருக்கு தன் மன சுயாதீனத் தன்மையை அதே வண்ணம் வெளிப்படுத்தல் ஆகும். இதன் போது மூன்றாம் நபர்கள் இத்தகைய தீர்மானங்களை எதுவித பக்கச்சார்பு மற்ற சுயாதீனமான தீர்மானமாக நோக்குதல் வேண்டும்.

***(05 புள்ளிகள்)***

## வினா 04ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

கட்டளைச் சட்டத்தின் பிரிவு என்பதன் படி வங்கியானது நல்லெண்ணத்துடன் கவனயீனமின்றி குறுக்கு கோடிடப்பட்ட காசோலை ஒன்றுக்கு, அக்குறுக்குக் கோட்டிற்கு அமைவாக கொடுப்பனவை செய்திருந்தால், அப்பணம் அதிகாரமளிக்கப்படாத நபர் ஒருவரால் பெறப் பட்டடிருப்பினும் கூட காசோலையின் உண்மையான உரிமையாளரிடமிருந்து பாதுகாக்கப்படும்.

வங்கியானது குறுக்குக் கோடிடப்பட்ட காசோலையின் பெறுமதியை ஏதேனுமொரு வங்கிக் கணக்கிற்கு வழங்க வேண்டும். குறுக்குக் கோடிட்ட காசோலையின் பெறுமதியை கரும பீடத்தில் வழங்க முடியாது. அவ்வாறு வழங்கப்படும்பட்சத்தில் வங்கியானது உரிமையாளருக்கு ஏற்படும் நட்டத்தை மீளச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது.

குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் வங்கியானது நல்லெண்ணத்துடன் குறுக்கு கோடிடப்பட்ட காசோலையின் பெறுமதியை தவறுதலாக (c) க்கு வழங்கியிருக்கிறது. (c) காசோலையை திருடியிருந்தமையை வங்கி அறிந்திருக்கவில்லை. குறுக்கு கோட்டிற்கு மாறாக வங்கியானது பெறுமதியை வழங்கியிருந்த போதும் காசோலையின் உண்மையான உரிமையாளருக்கு இழப்பு ஏற்படவில்லை. ஏனெனில் காசோலையை வைத்திருந்தவரை உண்மையான உரிமையாளரென வங்கியால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கும் நிலையில் (c) காசோலையின் உண்மையான உரிமையாளராகக் கருதப்படுகிறார். எனவே (A) வங்கியிடமிருந்து குறிப்பிட்ட தொகையை மீளப் பெற முடியாது. சம்பந்தப்பட்ட வழக்கு *Mercantile Bank of India Vs Ratnam.*

**(05 புள்ளிகள்)**

## வினா 05ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

ஓர் கம்பனி செயற்கையானதாக இருந்த போதும் தனியான சட்ட நபராகக் கருதப்படும். கம்பனியாது கூட்டிணைக்கப்பட்டவுடன் அதன் பங்குதாரர்கள், இயக்குனர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து வேறுபட்ட செயற்கையான தனி சட்ட நபராகக் கருதப்படும். இதனால் கம்பனி தனது பெயரில் வழக்குத் தொடரவும் தொடரப்படவும் முடியும். மேலும் தனக்குச் சொந்தமான சொத்துக்கள், பணத்தை வைத்திருக்கவும் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளவும், வங்கிக் கணக்கினை நிர்வகிக்கவும் கடன் பெற்றுக் கொள்ளவும் கம்பனி அங்கீகரிக்கப்பட்ட தொன்றாகும்.

**(05 புள்ளிகள்)**

## வினா 06ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

பங்குடைமை என்பது இலாப நோக்கினை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் பல்வேறு, நபர்களிடையே நிலவும் வணிக உறவினைக் குறிக்கும் பங்காளர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள், பங்குடைமை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். அவ்வாறானதொரு ஒப்பந்தம் காணப்படாதவிடத்து பங்குடைமைச் சட்டம் ஏற்புடைமை ஆகும். பங்குடைமைச் சட்டத்தின்படி பங்காளர்கள் தத்தமது நடவடிக்கைகள் தொடர்பான முழுமையான தகவல்களை மற்றைய பங்காளர்களுக்கு வழங்க வேண்டும். மேலும் ஒவ்வொரு பங்காளர்களும் குறித்த பங்குடைமையின் ஊடாக பெற்றக்கொண்ட பயன்பாடு தொடர்பிலான முழுமையான தகவல்களை மற்றைய பங்காளர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

குறித்த சந்தர்ப்பத்தில் அமல் ரூபாய் ஐம்பதாயிரம் கழிவைப் பெற்றதையும் ரூபாய் ஐம்பதாயிரம் இலாபம் ஈட்டியதையும் வெளிப்படுத்தவில்லை. இதன் மூலம் அமல் பங்காளரின் கடமையை மீதியுள்ளார். ஆகவே குறித்த பங்குடைமையானது ரூபா ஐம்பதாயிரம் இலாபத்தை அமலிடம் இருந்து மீளப்பெற உரித்துடையதாயிருந்தது.

சம்பந்தப்பட்ட வழக்கு : *Bentely Vs Craven (1853)*

*Pathirana Vs Pathirana*

**(05 புள்ளிகள்)**

**பிரிவு *B* இன் நிறைவு**

aat SRI LANKA

## பகுதி - C

**03 கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 30 புள்ளிகள்)**

## வினா 07ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a)

குறிப்பிட்ட விற்பனையானது உட்கிடையான நிபந்தனைகள் அடிப்படையிலான பொருள் விற்பனையாகும். பொருட்கள் விற்பனை ஒப்பந்தமானது மாதிரி, மற்றும் விவரணத்தின் அடிப்படையிலானதாகக் காணப்படும்போது பொருட்களானது விவரணத்துடன் மட்டுமல்லாது மாதிரியுடனும் ஒத்திருத்தல் வேண்டும்.

ஒரு விற்பனையாளர் தரம், மற்றம் உள்ளடக்கம் போன்றவற்றைக் குறிப்பிட்டு விற்பனை செய்யும்போது, குறிப்பிட்ட பொருட்கள் குறித்த தரம் மற்றும் உள்ளடக்கம் என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து உட்கிடையான நிபந்தனைகள் மீறப்படுகின்றன.

ராஜா என்பவர் அழகு சாதன கிரீம் பொதியினை மாதிரி மற்றும் உள்ளடக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு ராணிக்கு விற்பனை செய்திருக்கிறார். குறித்த விற்பனையில் மாதிரி ஒத்திருந்த போதிலும் உள்ளடக்கம் வேறுபட்டிருக்கிறது.

குறித்த அழகு சாதன கிறீம்பொதி உள்ளடக்கத்தில் குறிப்பிட்டு இருந்ததின் படி கடல் கனியுப்புகள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே ராணி பொருட்களை பெற மறுத்தல், இழப்பினைக் கோரல் போன்றவற்றுக்கு உரித்துடையவராகிறார்.

சம்பந்தப்பட்ட வழக்கு : *Nichol Vs Godts*

**(05 புள்ளிகள்)**

b) **பின்வருவனவற்றுள் ஏதேனுமொரு கொடுப்பனவு முறையை பயன்படுத்த முடியும்.**

**1. நாணயக் கடிதம்**

- நாணயக் கடிதமானது வங்கியால் ஒரு விற்பனையாளருக்கு, குறிப்பிட்ட ஆவணங்களுக்கு அமைவாக வழங்கப்படுகின்ற நிபந்தனையுடனான உத்தரவாதமாகும்.
- இது சர்வதேச வர்த்தகத்தில் ஒரு இறக்குமதியாளரின் நம்பகத்தன்மைக்கு பதிலீடாக வங்கியால் வழங்கப்படுகின்ற. குறிப்பிட்டதொரு கொடுக்கல் வாங்கல் உத்தரவாதமாகும்.
- இது சர்வதேச வர்த்தகத்தில் ஒரு இறக்குமதியாளரின் நம்பகத்தன்மைக்கு பதிலீடாக வங்கியால் வழங்கப்படுகின்ற, குறிப்பிட்டதொரு கொடுக்கல் வாங்கல் உத்தரவாதமாகும்.
- ஒரு நாணயக் கடித எற்பாட்டில் வங்கியானது ஏற்றுமதியாளரிடம் குறிப்பிட்ட ஆவணங்களை (காப்புறுதி, வார்நாமம்) பெற்றுக் கொண்ட பின்பு அவருடைய ஏற்றுமதிக்கான கொடுப்பனவை மேற்கொள்ளுகிறது.
- நாணயக் கடிதங்களைக் கட்டுப்படுத்தல், மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பவற்றை "நாணய மாற்று மரபு'' மற்றும் நடைமுறைகள் உள்ளடக்கிய விதிமுறைகள் தீர்மானிக்கின்றன.

**2. சேகரிப்பு ஒப்பந்தங்கள்**

- சேகரிப்பு ஒப்பந்தங்களானவை, விற்பனை விலையை கொள்வனவாளரின் நாட்டில் ஏற்பாடு செய்யும் போது மேற்கொள்ளப்படுகின்றது.
- இவ்வேற்பாட்டில் விற்பனையாளர் கப்பல் ஏற்றுமதி தொடர்பான ஆவணங்களை தனது வங்கிக்கு கையளிப்பார், வங்கியானது அவ்வாவணங்களை கொள்வனவாளரின் வங்கிக்கு கையளிக்கும்.
- கொள்வனவாளரின் வங்கி வார் நாமத்தை கொள்வனவாளரிடம் கையளித்து அதை ஏற்றுக்கொள்ளும்படி கோரும்.
- கொள்வனவாளர் ஏற்றுக்கொண்ட பின்பு ஏனைய கப்பல் ஏற்றுமதி ஆவணங்களையும் வங்கி அவரிடம் கையளிக்கும். இதன் மூலம் கொள்வனவாளர் வார் நாமத்தின் மூலப்பிரதியைப் பெற்றுக் கொள்வதோடு, கப்பலில் உள்ள பொருட்களையும் பெற்றுக்கொள்ள முடிகிறது.

  சேகரிப்பு ஒப்பந்தங்கள், சர்வதேச வர்த்தக மையத்தின் "சேகரிப்பு ஒப்பந்தங்களுக்கான விதி முறைகள்'' மூலம் நிர்வகிக்கப்படுகின்றன.

**3. திறந்த கணக்கின் மூலமான கொடுப்பனவுகள்**

- இம்முறையும் விற்பனையாளர் பொருட்களையும் கப்பல் ஏற்றுமதி ஆவணங்களையும் நேரடியாக கொள்வனவாளருக்கு அனுப்பி வைப்பதோடு கொள்வனவாளர் பின்னைய நாளில் அதற்கான கொடுப்பனவை மேற்கொள்வார்.
- இம்முறையானது குறிப்பாக நம்பகத்தன்மையுடைய, நன்கு அறியப்பட்ட வர்த்தகர்களிடையே மேற்கொள்ளப்படுகின்றது.

**4. முற்கொடுப்பனவு**

- இம்முறையில் இறக்குமதியாளர் பொருட்கள் அனுப்பப்படுவதற்கு முன்பே ஏற்றுமதியாளருக்கான கொடுப்பனவை மேற்கொள்ளுகிறார்.
- ஏற்றுமதியாளர் முழுமையான அல்லது பகுதிக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**5. இலத்திரனியல் வர்த்தகம்**

- இது இணையத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற தாள் பாவனையற்ற வர்த்தக முறையாகும்.
- இம்முறையின் மூலம் பொருட்களை குறைந்த விலையில் விரைவாகப் பெற்றுக்கொள்ள முடிகிறது.
- பிரதி கூலங்கள் - பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகள், இணையத்தினூடாக கொடுப்பனவு விவரங்களை வழங்குவது அபாயகரமானது.

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## வினா 08ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a)

ஒரு காப்புறுதி ஒப்பந்தம் செல்லுபடியானதாக வேண்டுமாயின் காப்புறுதி செய்யத்தக்க உரிமை காணப்பட வேண்டும். காப்புறுதியை நாடும் நபர் குறித்த கருப்பொருளின் பாதுகாப்பினால் நன்மை அடைபவராகவும் அல்லது இழப்பினால் பாதிக்கப்படுவராகவும் இருத்தல் வேண்டும். Griffith Vs Fleming வழக்கின்படி அமாலி தனக்கும் தன் கணவருக்குமாக சமர்ப்பித்த காப்புறுதி விண்ணப்பம் வெற்றிகரமாக முடிய வேண்டும். ஏனெனில் இவ்வழக்கின்படி ஒரு நபர் தனதும் மற்றும் தனது துணைவருடைய ஆயுள் மீதும் காப்புறுதி செய்யத்தக்க உரிமை கொண்டுள்ளார்.

***(05 புள்ளிகள்)***

b)

சுனாலி தனது சகோதரன், மற்றும் பெற்றோருக்கான காப்புறுதி விண்ணப்பத்தை சமர்ப்பித்திருக்கிறார். Evans Vs Crooks வழக்கின் படி ஒருவருக்கு தனது சகோதரரின் ஆயுள் மீது காப்புறுதி செய்யத்தக்க உரிமை கிடையாது. அதே வேளை Howard Vs Refuge Friendly Society வழக்கின் படி சுனாலி தனது பெற்றோருக்கான காப்புறுதியைப் பெற காப்புறுதி செய்யத்தக்க போதிய உரிமையைக் கொண்டிருக்கவில்லை.

***(05 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## வினா 09ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a) i)

1. வணிக நிறுவனங்கள் இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட வியாபார ஒப்பந்தங்களைக் கட்டுப்படுத்தல், வணிக நிறுவனங்களிடையிலான விலை தொடர்பான ஏற்பாடுகள், சர்வதேச வர்த்தகத்தையும் பொருளாதார அபிவிருத்தியையும் பாதிக்கும் தவறான ஆதிக்க நிலையினைக் கட்டுப்படுத்தல்.
2. ஆதிக்க நிலையை தவறாகப்பயன்படுத்தல் மற்றும் சந்தைப்போட்டியை சீர்குலைக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளல் (சந்தைப் போட்டியை சீர்குலைத்தல் என்பது ஒரு நபர் அல்லது குழு ஒன்று சேர்ந்து தரமான பொருட்களை அல்லது குறைந்த விலையில் பொருட்களை வழங்காது தமது சந்தைப் பங்கை அதிகரிப்பதை குறிக்கின்றது)
3. பொருட்களை மற்றும் சேவைகளை வழங்கும் நபர்களிடையே போட்டித் தன்மையை ஊக்கப்படுத்தல்.
4. நுகர்வோர், கொள்வனவாளர்கள் மற்றும் ஏனைய பாவனையாளர்களின் உரிமைகளையும் நன்மைகளையும் பாதுகாத்தல், இது நியாயமான விலை, மற்றும் தரமான பொருட்கள், சேவைகளை உள்ளடக்குகிறது.
5. கொள்வனவு செய்யக் கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம், அளவு, தூய்மை, நியமம், மற்றும் விலை தொடர்பான தகவல்களை நுகர்வோருக்கு அறியப்படுத்தல்.
6. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல்.

***(04 புள்ளிகள்)***

ii) **நுகர்வோர் அதிகார சபையால் விதிக்கப்பட்டுள்ள பின்வரும் கடப்பாடுகளில் ஏதேனும் இரண்டு**

1. அதிக பட்ச சில்லறை அல்லது மொத்த விற்பனை விலையை காட்சிப்படுத்தல்
2. விற்பனை செய்த பொருட்களுக்கு பற்றுச் சீட்டை வழங்குதல்.
3. நுகர்வோர் அதிகார சபையால் விடுக்கப்படும் அறிவிப்புகளை காட்சிப்படுத்த ஒரு அறிவிப்பு பலகையை வைத்திருக்க வேண்டும்.
4. எந்த ஒரு நுகர்வோரையும் வணிகரையும் தவறாக வழி நடத்தக் கூடாது.
5. பொருட்கள் தொடர்பாக பிழையான தகவல்களை வழங்கக் கூடாது.
6. நுகர்வோர் அதிகார சபையில் தம்மைப் பதிவு செய்தல்.

**(02 புள்ளிகள்)**

b)

**பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு ஊழியர் தனது ஊழியர்சேமலாப நிதிப் பங்களிப்பினை கோர முடியும்.**

a. ஓய்வு வயதினை அடைந்திருத்தல் (ஆண் ஊழியர் - 55 வயது. - பெண் ஊழியர் 50 வயது)

b. திரும்பி வரும் எண்ணமின்றி இலங்கையை விட்டு நீங்குதல்

c. நிரந்தரமான அங்கயீனத்திற்கு உள்ளாதல்

(இது மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற மருத்துவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)

d. பெண் ஊழியர் ஒருவர் திருமணத்தினை நோக்காகக் கொண்டு இராஜினாமா செய்தல் (இராஜினாமா செய்து 3 மாதத்திற்குள் திருமணம் செய்ய வேண்டும். அல்லது திருமணம் செய்து 5 வருடத்திற்குள் இராஜினாமா செய்ய வேண்டும்.)

e. பொதுச்சேவை அல்லது உள்;ராட்சி சேவையில் ஓய்வூதிய நியமனம் பெற்றுக் கொள்ளல்.

f. ஊழியரின் இறப்பின் போது (அவரால் நியமிக்கப்பட்டவர் நலன்களுக்கு உரித்தாக முடியும்)

g. ஒரு ஊழியர் பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது அரசுரிமை வர்த்தக நிறுவனத்தில் ஊழியராக இருந்து வேலை நீக்கம் செய்யப்படும் போது.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**பிரிவு *C* இன் நிறைவு**

## பகுதி - D

**கட்டாய வினா**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## வினா 10ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a) i) இது ஒப்பந்த சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒப்பந்தம் என்பது ஒரு திறத்தவர்களின் கருத்துகளின் ஒருமிப்பாகும். அக்கருத்துகளின் ஒருமிப்பானது திறத்தவர்களின் நடவடிக்கை மூலம் உட்கிடையாக அறியப்படலாம். அது “கொடை முனைவு” மற்றும் ஷஷஏற்பு” என அறியப்படும்.

கொடை முனைவு என்பது ஒரு திறத்தவரின் ஒப்பந்த வாசகங்களுக்கு இணங்கிக் கொண்டு மற்றைய திறத்தவருடன ஒப்பந்தத்திற்குள் நுழைவதற்கான விருப்பத்தினை தெரிவித்தலே ஆகும்.

கொடை முனைவானது எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் அல்லது நடத்தை மூலமாகவும் மேற்கொள்ளப்படலாம். குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் மாலா தனது வீட்டினை ரூபா இரண்டு மில்லியனுக்கு விற்பனை செய்வதற்கு குமாரியிடம் கொடை முனைவு மேற் கொண்டுள்ளார்.

ஒரு கொடை முனைவு மறுப்பின் மூலம் முடிவுறுத்தப்பட முடியும். கொடை முனைவு பெறுனர் மறுக்கும் பட்சத்தில் முடிவுக்கு வருகிறது. மறுத்தல் செல்லுபடியாக வேண்டுமாயின் அது கொடை முனைவாளருக்கு அறியப்படுத்தப்படல் வேண்டும். ஒரு கொடை முனைவு, எதிர் கொடை முனைவை செய்வதன் மூலம் மறுக்கப்படலாம். ஏதிர் கொடை முனைவை செய்வதன் மூலம் மறுக்கப்படலாம். எதிர்கொடை முனைவானது புதிய கொடை முனைவைச் செய்தல் அல்லது நிபந்தனைகளைச் சுமத்தி கொடை முனைவை ஏற்றுக் கொள்வதன் மூலம் செய்யப்படலாம்.

இச்சந்தர்ப்பத்தில் குமாரி நான்கு தவணைகளில் பணத்தை செலுத்துவதாக தெரிவத்ததன் மூலம் எதிர் கொடை முனைவைச் செய்துள்ளார். இந்நிலையில் ரூபா இரண்டு மில்லியனுக்கு வீட்டை விற்பனை செய்யும் கொடை முனைவானது, தவணை முறையில் செலுத்தும் எதிர்கொடை முனைவின் மூலம் மறுக்கப்பட்டுள்ளது.

மேலும் மாலா எதிர்கொடை முனைவை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே மாலா மற்றும் குமாரி இடையே செல்லுபடியான ஒப்பந்தமொன்று காணப்படவில்லை.

சம்பந்தப்பட்ட வழக்கு : *Hyde Vs Wrench*

*Neal Vs Merett*

**(08 புள்ளிகள்)**

ii)

இது ஒப்பந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். ஓர் ஒப்பந்தமானது நிலைகுலைவின் மூலம் முடிவுறுத்தப்பட முடியும். ஒப்பந்தம் ஒன்றின் உருவாக்கத்தின் பின்னர் இரு திறத்தவர்களுடைய தவறினால் அன்றி நியாயமாக எதிர்பார்க்க முடியாத சில நிகழ்வுகள் இடம்பெறுமாயின் அவ்வொப்பந்தம் நிலைகுலைவினால் தள்ளுபடி செய்யப்படும்.

குறித்த சந்தர்ப்பத்தில் பாதுகாப்பு பிரச்சினை காரணமாக விசேடமான நிகழ்வொன்று இடம் பெறாத வேளை ஒப்பந்தமானது நிலைகுலைவின் மூலம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தமானது நிலைகுலைவின் மூலம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதால் இரு திறத்தவர்களும் தமது பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்படுவர். ஆகவே பியால் முன்பதிவு

செய்வதற்காக செலுத்திய பணத்தை மீளப் பெற முடியும்.

சம்பந்தப்பட்ட வழக்கு : *(Krell Vs Henry)* **(03 புள்ளிகள்)**

b) i)

குசல் மற்றும் மாயா ஆகியோர் இடையேயுள்ள ஒப்பந்தமானது எதிர்கால பொருள் விற்பனையுடன் சம்பந்தப்பட்டது. இப்பொருட்கள் விற்பனை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட பின்பு விற்பனையாளரால் உற்பத்தி அல்லது கொள்வனவு செய்யப்படும்.

இரு தரப்பினரும் பொருள் விற்பனை ஒப்பந்தத்தினை செய்துள்ளனர். எனினும் குறித்த வருடியை (Scanner) குசல் ஒப்பந்தத்தின் பின்னரே இறக்குமதி செய்யவுள்ளனர். குறித்த எதிர்காலப் பொருட்கள் விற்பனை ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் போது இருப்பில் காணப்படவில்லை.

ஆகவே குசல் மற்றும் மாயா ஆகியோரிடையே செல்லுபடியான விற்பனை ஒப்பந்தமொன்று காணப்படுகிறது.

**(03 புள்ளிகள்)**

ii)

குசல் மற்றும் ரவிந்து ஆகியோரிடையே காணப்படும் ஒப்பந்தமானது இருப்பில் உள்ள பொருட்களை அடிப்படையாகக் கொண்டது. விற்பனை ஒப்பந்தம் ஒன்றினை உருவாக்கும் போது பொருட்கள், விற்பனையாளரால் உடமை கொள்ளப்பட்டு, அவரே உரிமையாளராக காணப்பட்டால் அவை இருப்பில் உள்ள பொருட்கள் எனப்படும். ஆகவே ரவிந்து மற்றும் குசல் இடையே செல்லுபடியான விற்பனை ஒப்பந்தம் ஒன்று காணப்படுகிறது.

**(03 புள்ளிகள்)**

iii)

குசல் புதுவருட தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பாக தயாவிடம் விநியோகிக்கத் தவறியுள்ளார். இதனால் கொள்வனவாளர் என்ற வகையில் தயால் பின்வரும் சட்ட உரிமைகள், மற்றும் நிவாரணங்களுக்கு உரித்துடையவராவர்.

- **விநியோகிக்கத் தவறியமைக்கான சட்ட நடவடிக்கை:-** குறித்த பொருட்களை கொள்வனவாளருக்கு விநியோகிக்க குசல் தவறியுள்ளார். இந்நிலையில் தயால் இழப்பீடு கோரி குசலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும்.
- பொருட்கள் விநியோகிக்கப்படாமையினால் தயாலால் கொடுக்கப்பட்ட விலையினை மீளப்பெற முடியும்.
- **குறித்த நிறைவேற்றத்திற்கான நடவடிக்கை:-** ஒரு ஒப்பந்தமானது திட்டவட்டமான பொருள் விநியோகத்திற்கானதாயின், நீதிமன்றம் குறித்த ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி பணிக்கலாம். இதன் போது குறித்த பொருட்களுக்கான இழப்பீட்டை விற்பனையாளர் செலுத்திய பின்பும் பொருட்களை வைத்திருக்க அனுமதிக்கப்படமாட்டாது. எனினும் இழப்பீடு மாத்திரமே போது மானதாகக் கருதப்படும்பட்சத்தில் இம்முறை நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது. பொதுவாக இந்நிவாரணமானது சந்தையில் உடனடியாக வாங்கப்பட முடியாத சிறப்பு பெறுமதியுடைய பொருட்களுக்கே வழங்கப்படும்.

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## பிரிவு *D* இன் நிறைவு

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".

The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2018 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*